# தமிழ் வளாச்சியில் இசுலாமியர்களின் பங்கு

12

நா நிவேதா லட்சுமி & திரு.வீ.கோபிநாத்

உளவியல் துறை, பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி,கோவை

23mpy025@psgrkcw.ac.in, gobinath@psgrkcw.ac.in

**ஆய்வு நோக்கம்:**

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இஸ்லாமியர்களின் பங்களிப்பும் இஸ்லாமிய சமயத்தில் பின்பற்றிய தமிழ் முறைகளை பற்றி ஆய்வு செய்வதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கம்.

**ஆய்வுச் சுருக்கம் :**

சமயம் என்றால் கடவுள் நம்பிக்கையின் அடிப்படையிலான கோட்பாடு மற்றும் அனைவரும் ஒன்று என்று அர்த்தமாகும். உலகில் வேறு எந்த மொழிகளுக்கும் இல்லாத தனிப்பெரும் சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு பல சமயங்கள் தமிழை வளப்படுத்தி உள்ளன. அதில் இஸ்லாமியப் புலவர்களின் பங்கு இன்றியமையாதது. சில இஸ்லாமிய இலக்கியங்களே பலரால் அறியப்படுகிறது, அறிமுகப்படுத்தாமல் எண்ணற்ற நூல்கள் ,பாடல்கள் உள்ளன. இவ்வாறு அதிகம் அறியப்படாத இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களையும் இஸ்லாமிய சமயத்தில் கண்டறியப்பட்ட தமிழ் மொழி சார்ந்த வரலாற்றையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் அதனை கட்டுரையின் வாயிலாக ஆய்வு செய்துள்ளோம்.

**திரவுச்சொற்கள்:**

1.வண்ணப்பரிமளப்புலவர்-ஆயிரம் மசலா-தீமைக்கு தண்டணை

2.முகியித்தீன்-படைப்போர்-போர் நூல்

3.கனகவிராயர்-கனகாபிஷேக மாலை -கடவுள் வாழ்த்து

4.தமிழ் எண்கள்-தென் தமிழக மசூதிகள்

**முன்னுரை:**

சமயம் என்றால் எல்லோரும் சமம் என்ற எண்ணத்தோடு ஒத்தும் உதவியும் வாழ வேண்டும் என்பதும் இறை உயிர் உலகம் பற்றிய ஒரு நம்பிக்கை முறை எனலாம் மக்கள் தங்கள் கடவுள் நம்பிக்கைக்கு ஏற்ப சமயங்களை ஆரம்பித்து பின்பற்றினர். சைவம் வைணவம் சம்மதம் பௌத்தம் கிருத்துவம் மற்றும் இஸ்லாமிய என பல பிரிவுகள் உள்ளன தமிழ் பேசும் மக்களுடைய சமய மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் தமிழ் மாதங்களாக அவர்களிடமிருந்து பிடிக்க இயலாததாக இருக்கின்றன. இச்சமயங்களில் ஒன்றான இஸ்லாமிய சமயத்தில் இயற்றப்பட்ட இலக்கியங்களை பற்றி எடுத்துரைப்பதே இந்த ஆய்வு கட்டுரை.

**இஸ்லாமிய சமயத்தின் வரலாறு:**

முகமது நபி இஸ்லாமியத்தின் தீர்க்கதரிசியாவார் ,இவர் இஸ்லாமியத்தின் புனித நூலாக

குர்ஆனை அறிவித்தார். தனது வாழ்நாள் முழுவதையும் இப்போது சவுதி என்று அழைக்கப்படும் அரேபியாவில் களித்தார். அவரது காலம் கிபி 570 மெக்காவில் பிறந்ததிலிருந்து 632-ல் மதினாவில் இறந்தார். தமிழகம் தன் பொருள் வழங்கலால் தொலைதூர வணிகர்களின் கவனத்தை கவர்ந்து வந்தன.கிபி ஏழாம் நூற்றாண்டில் மத்திக்குள்ளாக அரேபியர்கள் அனைவருமே இஸ்லாமியத்தில் தீவிர பங்கு எடுத்துக் கொண்டிருந்தனர்.தமிழகத்தில் கிபி 650- 750 ஆம் ஆண்டு , முதன் முதலில் இஸ்லாமியம் பரவிய காலகட்டம் என்று அழைக்கப்படுகிறது ஆராய்ச்சியாளர்கள் இஸ்லாமியம் தமிழகத்தில் மூன்று அல்லது நான்கு கட்டங்களாக பரவியது என்று குறிப்பிடுகின்றனர்.

**இஸ்லாமியமும் தமிழ் இலக்கியமும்.**

தமிழ் இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக இருந்தபோதிலும் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டுகள் பல. கிபி 1572 ஆம் ஆண்டு மதுரை தமிழ் சங்கத்தில் தமிழ் முஸ்லிம்களது இலக்கியமான ஆயிரம் மசலா என்ற அதிசய புராணம் வெளிவந்தது. தமிழில் புராணம் ,அந்தாதி ,பள்ளு என்று இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியமும் இஸ்லாமியர்களால் படைக்கப்பட்டது. இதில் பெரும்பாலும் அறியப்படுவது சீறாப்புராணம். பல நூற்றுக்கணக்கான படைப்புகளும் இஸ்லாமிய எழுத்தாளர்களும் பெரும்பாலும் அறியப்படவில்லை. இந்த நிலை 1950 ஆம் ஆண்டு வரை நிலவி வந்தது இஸ்லாமிய கவிஞர்கள் எழுத்தாளர்கள் 5027 மேற்பட்ட பாடல்கள் தமிழ் மொழியில் இயற்றியுள்ளனர்.

**இஸ்லாமியர்களும் தமிழகமும்.**

இஸ்லாமியர்களின் வருகைக்குப் பின்னரே தமிழ்நாட்டில் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் தோன்றின குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் இஸ்லாமியர்கள் தமிழ் மக்களுடன் கலந்து பழகிய பின்னரே இஸ்லாமிய தமிழ் இலக்கியம் தோன்றியது. இவர்கள். தமிழ்நாட்டில் இருந்த கிழக்கு மேற்கு வணிகத்துறையிலேயே பெரிதும் ஈடுபட்டு வந்தனர். அவ்வரபு மக்களை எட்டுத்தொகை போன்ற நூல்களில் யவனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. யவனர் மக்கள் மத்திய தரைக் கடலுக்கு வடக்கிழக்கு இரண்டு கடல்கள் உள்ளன. ஏஜியன் மற்றும் ஐயோனியன் கடல். இந்த ஐயோனியர் இக்கடலைச் சுற்றிவர உள்ள பிரதேசமே ஐயோனியன் கடற்கரை பிரதேசமாக கணிக்கப்பட்டுள்ளது.இப்பிரதேசத்திலிருந்து கீழே நாடுகளுக்கு வந்தவர்கள் ஐயோனியர்கள் பின்னர் இவர்களை யவனர் என்று அழைத்தனர். இவ்வாறு தமிழகத்திற்கு வந்த அரேபியர்கள் மக்களால் ஏற்கப்பட்டதற்கு இந்தியாவின் மாபெரும் ஆன்மிக அறிஞர்களில் ஒருவரான சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "முஹம்மதியர்களின் வருகை ஒடுக்கப்பட்டோர் முதல் ஏழைகள் வரை ஈடேற்றம் தருவதாக அமைந்தது. இதனால்தான் நமது மக்களில் ஐந்தில் ஒரு பங்கினர் முஸ்லிமாக மதம் மாறி உள்ளனர்.

**திசை சொற்கள்:**

தமிழ் இலக்கியத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புக்கப்பின் இலக்கிய வடிவங்கள் அறிமுகம் ஆயின. கிஸ்ஸா, நாமா,மசலா ,மூனாஜத்து, படைப்போர். மசலா என்னும் சொல் 'மஸ்அலா'

இன்னும் அரபு சொல்லின் பொருள் வினா என்பதாகும், இது மட்டுமில்லாமல் தக்கலை பீர் முஹம்மது அப்பா, கோட்டாறு ஞானியார் சாஹிபு, காயல் காசிம் புலவர், குணங்குடி மஸ்தான் சாஹிபு, தொண்டி மோனகுரு மஸ்தான், அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் ஆகியோரது இன்னிசைப் பாடல்களும்,இராமநாதபுரம் வெ. இபுறாஹீம் சாஹிபு போன்றவர்களின் நாடக நூல்களும் பெருமைமிகு பட்டியலில் இடம் பெற்றவையாகும். இந்தப் படைப்புகளுடன் அரபு, பார்சி, உருது ஆகிய மொழிப் புலன்களிலிருந்து பெற்ற தங்களது புலமைத் திறனை அந்த மொழிகளின் வடிவங்களான நாமா, கிஷ்ஷா, முனாஜாத் என்ற புதிய இலக்கிய வடிவங்களையும் தமிழ் மொழியில் புகுத்தி உள்ளனர் . தக்கலை பீர் முஹம்மது அப்பா, கோட்டாறு ஞானியார் சாஹிபு, காயல் காசிம் புலவர், குணங்குடி மஸ்தான் சாஹிபு, தொண்டி மோனகுரு மஸ்தான், அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் ஆகியோரது இன்னிசைப் பாடல்களும்,இராமநாதபுரம் வெ. இபுறாஹீம் சாஹிபு போன்றவர்களின் நாடக நூல்களும் பெருமைமிகு பட்டியலில் இடம் பெற்றவையாகும். இந்தப் படைப்புகளுடன் அரபு, பார்சி, உருது ஆகிய மொழிப் புலன்களிலிருந்து பெற்ற தங்களது புலமைத் திறனை அந்த மொழிகளின் வடிவங்களான நாமா, கிஷ்ஷா, முனாஜாத் என்ற புதிய இலக்கிய வடிவங்களையும் தமிழ் மொழியில் புகுத்தி உள்ளனர்.

**ஆயிரம் மசலா :**

“இன்புறுங்கரமுங்காலு மிடுப்பொடு சேர்த்துக்கட்டி
மின்படு நெருப்புத்தூணால் மிடை படவடிப்பார் நாளுந்
தன்வினைத்தன்னைச் சுற்றிக் கொடுவினையாகத்தானே” (ஆயிரமசலா: 588)

இவ்வரிகள் அவர்களின் தீவினைக்கு ஏற்ப தண்டனை வழங்கப்படும் இஸ்லாமிய நெறிமுறை பற்றி நாயகம் தம் வாக்கால் விவரிக்கப்படுகிறது இந்நூல் ஆயிரம் வினாக்களுக்கும் அதற்குரிய விளக்கங்களையும் நபிகள் நாயகம் வாழ்க்கை பின்புறத்துடன் எடுத்துரைக்கின்றனர். இந்நூல் தமிழுக்கு மற்றொரு. நீதி இலக்கியமாகவும் நல்வழிமுறைகளை எடுத்துரைக்கும் நூலாகவும் அமைந்துள்ளது. இதனை ஏற்றியவர் வண்ணப்பரிமளப் புலவர்.

**சக்கூன் படைப்போர்:**

படைப்போர் ஒரு புதுவிதமான இலக்கிய வடிவமாகும் ஓர் இலக்கியமான பரணி இலக்கியங்களுக்கு பின் வேறு எந்த தமிழ் இலக்கியங்களிலும் தோன்றவில்லை என்ற கருத்தை தமிழ் இலக்கிய உலகில் பெரிதும் நிலவுகின்றது. ஆனால் இது பெரும் தவறுதலாகும்,இத்தவருக்கு காரணம் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களுக்கு உரிய முக்கியத்துவம் தமிழ் இலக்கிய வரலாற்றில் அளிக்கப்படாததே ஆகும்.

“ மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று
நயப்புறு தாழிசை உறுப்பிற் பொதிந்து”
(பன்னிரு பாட்டியல் : 142)


அரபு மொழியில் 'கிதாபுல் மகாசி' என்னும் நூல் முகமது இப்னு உமருல் வாக்கிதி என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. கிதாபுல் மகாசி என்பதன் பொருள் போர்களின் நூல் என்பதாகும். இந்த நூலை இயற்றியவர் முகியித்தீன்.

**முதல் இஸ்லாமிய காப்பியமும் கடவுள் வாழ்த்தும்:**

இஸ்லாமிய அடிப்படையிலேயே முஸ்லிம் புலவர்களால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் காப்பியங்களுள் காலத்தால் முந்தியது கனகாபிஷேக மாலை ஆகும். இதனை இயற்றியவர் கனகவிராயர். இக்காப்பியம் அலியின் புதல்வர் உசைன் அவர்களின் வீரத்தை புகழ்ந்து பாடப்பட்டுள்ளது.இஸ்லாமிய அடிப்படையில் தோன்ற தமிழ் இலக்கியங்களில் கடவுள் வார்த்தைப் பொருத்தவரையில் ஒரு சீரான ஒழுங்குமுறை கடைபிடிக்கப்பட்டு வந்து வருகிறது முதலில் கடவுள் வாழ்த்து. இறை அருளின் பண்புகள் பற்றி பேசப்படும் பின்னர் கடவுளின் ஆசி பெற வேண்டி கவிஞர்கள் பாடுவர் அதனை தொடர்ந்து தீர்க்கதரிசிகள் மற்றும் நம் நபிமார்கள் பற்றி. வாழ்த்து பாடல் அமையும் மற்றும் நூல்களில் பெரும்பாலும் கடவுள் வாழ்த்து வேறுபடும்.

**கட்டிடக்கலையில் இஸ்லாமும் தமிழும்.**

மசூதிகள் தமிழில் பள்ளிவாசல் என்பர் கல்லால் கட்டப்பட்ட பள்ளியை கல்லுப்பள்ளி என்று அழைப்பர். இந்தக் கல்லு பள்ளிகள் அடிப்படையில் மண்டபங்கள் போலவே கட்டப்பட்டுள்ளன. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்ட ஒன்று மிகவும் அழகானது. இராமநாதபுரத்தின் அப்போதைய ஆட்சியாளர்களான சேதுபதிகளிடம் கணிசமான செல்வாக்கு பெற்ற பெரும் வணிகராக டச்சு பதிவுகள் பேசும் சீதக்காதி என்றழைக்கப்படும் பெரியதம்பி மரக்காயரால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. விஜயநகர காலத்தின் பிற்பகுதியில் திராவிட கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்ட மசூதி, பூர்வீக மரபுகளுக்கு குறிப்பிட்ட கூறுகளைக் கொண்டுள்ளது. இந்த நாட்காட்டியில் அசாதாரணமானது என்னவெனில், பல்வேறு தமிழ் மாதங்களில் தொழுகைக்கான நேரங்கள் தமிழ் எண்களில் குறிக்கப்பட்டுள்ளன, இது தென் தமிழகத்தில் உள்ள வேறு சில மசூதிகளில் மட்டுமேகாணப்படுகிறது.



தமிழ் கலாச்சாரத்தில் ஆழமாகப் பதிந்துள்ள இந்தப் பள்ளிவாசல்கள் தமிழ் மலர்ந்த இடங்களாகவும் இருந்தன. மேலும் தெற்கே, நாகர்கோவிலில் உள்ள கோட்டார் மசூதியில், 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆலி புலவரால் கூடியிருந்த சபைக்கு ஒரு ஆரம்பகால தமிழ் இஸ்லாமிய இலக்கியப் படைப்பான மிகுராசு மாலை வழங்கப்பட்டது.

**முடிவுரை:**

உலகில் அனைவராலும் போற்றப்படும் தமிழ் மொழியை, பண்பாட்டை. இஸ்லாமிய சமயம்

தமிழுக்கு அளித்த முக்கியத்துவம் சொற்களால் விவரிக்கப்பட வேண்டியது அல்ல. மேலும் இஸ்லாமிய மத நடைமுறைகள் உளவியல் நல்வாழ்வுக்கு பல நன்மைகளை வழங்குகின்றன. பிரார்த்தனை மற்றும் உண்ணாவிரதம் போன்ற சடங்குகளில் ஈடுபடுவது ஆன்மீக நிறைவு மற்றும் இணைப்பு உணர்வை வழங்குகிறது. இஸ்லாத்தின் கட்டமைப்பு தெளிவான நோக்கத்தை அளிக்கிறது மற்றும் தார்மீக மற்றும் நெறிமுறை நடத்தையை ஊக்குவிக்கிறது. வகுப்புவாத நடவடிக்கைகளில் பங்கேற்பது சொந்த உணர்வையும் ஆதரவையும் வளர்க்கிறது. தினசரி பிரார்த்தனை மற்றும் உண்ணாவிரதம் போன்ற வழக்கமான நடைமுறைகள் தினசரி வாழ்க்கையில் ஒழுக்கத்தையும் கட்டமைப்பையும் வளர்க்கின்றன. கூடுதலாக, இஸ்லாமிய போதனைகள் நன்றியுணர்வு, மனநிறைவு மற்றும் மன்னிப்பு தேடுதல் ஆகியவற்றை ஊக்குவிக்கின்றன, ஒட்டுமொத்த மன நலத்திற்கு பங்களிக்கின்றன. அல்லாஹ்வின் கருணையின் மீதான நம்பிக்கையும், பொறுப்புக்கூறல் என்ற கருத்தும் சவாலான நேரங்களிலும் நம்பிக்கையையும் நம்பிக்கையையும் அளிக்கிறது. இந்த நடைமுறைகள் மதிப்புமிக்க சமாளிக்கும் வழிமுறைகளாகச் செயல்படும், சிரமம் அல்லது மன அழுத்தத்தின் போது ஆறுதலையும் ஆறுதலையும் அளிக்கிறது. இலக்கியத்தில் இஸ்லாமியர்களின் பங்கு இன்றியமையாதது இத்தக சிறப்படைய இஸ்லாமிய சமயத்திற்கும் தமிழ் இலக்கியங்கள் கட்டிடக்கலை பற்றி உருவான இந்த ஆய்வு மூலம் தமிழ் வளர்ச்சியில் இஸ்லாமியர்களின் பங்கை அறிந்து கொண்டுள்ளோம்.

**மேற்கோள்கள்:**

1. மா முஹம்மது உவைஸ் ,பீ.மு. அஜ்மல்கான் ;இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி ஒன்று தொடக்க காலம்
2. The Future of India The Complete Work of Swami Vivekananda. Advaitha Ashram, Calcutta 14
3. Muslim Merchants – The Economic Behaviours of the Indian Muslim Community, Shri Ram Centre for Industrial Relations and Human Resources, New Delhi, 1972
4. First Muslim and first Mosque in India - AMUST
5. இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி ஒன்று தொடக்க காலம்; சிறப்புரை , பக்.v,vi,vii
6. Mosques in Dravidian-Islamic style: About the Islamic architecture in Tamil Nadu | Mpositive.in. https://www.mpositive.in/2018/10/04/mosques-in-dravidian-islamic-style-about-the-islamic-architecture-in-tamil-nadu/
7. இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி ஒன்று தொடக்க காலம்; நான்காம் இயல் ஆயிரமசலாவென்று வழங்கும் அதிசய புராணம், பக்.149,150,161
8. இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி ஒன்று தொடக்க காலம்; ஏழாம் இயல் கனகாபிசேகமாலை, பக்.255,256,257
9. இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி ஒன்று தொடக்க காலம்; எட்டாம் இயல் சக்கூன் படைப்போர், பக்.347,348,349.
10. *Sinai, Nicolai and Watt, William Montgomery. "Muhammad". Encyclopedia Britannica, 8 Sep. 2023, https://www.britannica.com/biography/Muhammad. Accessed 8 September 2023.*